OS .No. 7/2015 நாள் : 17.10.2023

DW1 குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)

இந்த வழக்கில் நான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி தாவா சொத்தின் பக்கத்து தெருவில் உள்ளார். அவருக்கு எங்கள் குடும்ப விவரம் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து எனது தாயாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு நானும், 3 முதல் 8 பிரதிவாதிகளும் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்தை விற்பனை செய்வதற்கு முன்பாக தினசரி செய்தித்தாளில் பொது அறிவிப்பு கொடுத்தாரா என்றால் கொடுத்தார். வா.சா.ஆ.5 தினசரி செய்தித்தாளில் வாதி மற்றும் அவரது சகோதரிகள் பொது அறிவிப்பினை நான் செய்தித்தாளில் கொடுத்த பொது அறிவிப்பிற்கு பிறகு தான் கொடுத்தார்கள். வாதி தனது பொது அறிவிப்பில் தாவா சொத்தில் 1/8 பாகம் உள்ளது என்று அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் தாவா சொத்தை 3 ம் நபர்களுக்கு விற்பனை செய்யக்கூடாது என்று கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். இந்த விவரம் 2 ம் பிரதிவாதிக்கு தெரியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 20.08.2011 தினமலர் நாளிதழில் நான் பொது அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். நான் அந்த பொது அறிவிப்பில் எனது தாயார் பதிவு செய்யப்படாத ஒரு உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளதாகவும், அதில் ஆட்சேபணை இருந்தார் தெரிவிக்கலாம் என்றும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை கொடுக்க வேண்டும் என்று தோன்றியது, அதனால் கொடுத்தேன். எனது தாயார் எனக்கு உயில் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்ற ஒரு உயில் ஆவணத்தை மோசடியாக தயார் செய்து கொண்டு மேற்படி பொது அறிவிப்பை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த பொது அறிவிப்பு சங்கதிகள் வாதி மற்றும் 3 முதல் 8 பிரதிவாதிகளுக்கு தெரியாது என்றும், அது வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆவணங்களின் அசல் பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 மற்றும் பி.வா.சா.ஆ.4 ஆவணங்களின் அசல் ஆவணங்கள் எங்குள்ளது என்பது குறித்து எனது எதிர் வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான், பி.வா.சா.ஆ.4 எனது தகப்பனார் எழுதிவைத்த உயில் ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ன்படி எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கான பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.3 உயில்

ஆவணம் ஏற்பட்டது வாதிக்கும், 3 முதல் 8 பிரதிவாதிகளுக்கு ம் தெரியாது என்றும், அதனடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை பி.வா.சா.ஆ.4 ன்படி உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளதாகவும், அதன்படி பட்டா பெயர் மாற்றம் எனது பெயருக்கு செய்து அந்த பட்டா ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணம் நாளது தேதிவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ன் அசல் ஆவணம் என் கைவசம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் கடன் பெற்றதற்காக கொடுத்துள்ளேன். இதுகுறித்து எனது எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ கூறவில்லை என்றால் சரிதான். எனது அப்பாவின் சொத்து என்பதால் அந்த ஆவணங்கள் குறித்து இந்த வழக்கில் கூறவேண்டிய அவசியம் இந்த வழக்கில் ஏற்படவில்லை. புவனேஷ்வரி எனது மனைவியாவார். தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் நான் கடன் கேட்டு விண்ணப்பித்த மனுவிற்கு வங்கியில் 02.08.2011 தேதியில் கொடுத்த பதில் என்னிடம் காட்டப்படுவதுதான் என்றால் சரிதான். நான் எனது மனைவி பெயரில் வீடு கட்டுவதற்காக கடனுக்கு விண்ணப்பித்திருந்தேன் என்றால் சரிதான். அந்த கடன் எனது தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்களைப் பொறுத்துதான் கடன் கோரியிருந்தேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் எழுதிய உயிலை Probate செய்து தரவேண்டும், எனது சகோதரிகளிடம் கன்சண்ட் வாங்கி தரவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது சகோதரிகள் அதன்படி கன்சண்ட் லெட்டர் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வங்கி கொடுத்த பதில் நகல் **வா.சா.ஆ.11** ஆகும். வா.சா.ஆ.11 ஆவணத்தின் வாயிலாகத்தான் எனது தந்தை எனக்கு உயில் எழுதி வைத்த விவரமே வாதிக்கும், 3 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் தெரிய வந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11ல் கண்டவாறு வாதி மற்றும் 3 முதல் 8 பிரதிவாதிகளிடம் கண்சண்ட் வாங்கி கடன் பெறவில்லை என்றால் சரிதான், ஏற்கனவே நான் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியில் வாங்கியிருந்த கடனை தற்போது பேங்க் ஆப் பரோடாவில் இணைக்கப்பட்டுள்ளது. அந்த வங்கியனாது நான் தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியில் வாங்கியிருந்த கடனை டேக் ஓவர் செய்து கொண்டு மேற்கொண்டு எனக்கு கடன் கொடுத்து நான் வீடு கட்டினேன். நான் கூறியவாறு தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி எனக்கு எனது தந்தை சொத்திற்காக கடன்

கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றானது 05.02.2013 தேதியில் தாவா சொத்திற்கான வில்லங்க சான்று என்றால் சரிதான். அது **வா.சா.ஆ.12** ஆகும். மேற்படி வா.சா.ஆ.12 வில்லங்க சான்றின்படி தாவா சொத்தினை 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 ஆவணத்தின்படி எனது தாயார் எனக்கு உயில் எழுதி வைத்தது தெரிவிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை நான் விற்பனை செய்யக்கூடாது என்று கூறி வாதி நாகப்பட்டினம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரு ஆட்சேபணை மனு வா.சா.ஆ.3 ஐ கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 பதில் படி வாதி நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆகிய ஆவணங்களில் கண்டுள்ள விவரங்கள் வா.சா.ஆ.6 வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சொல்லப்பட்டுள்ளது, ஆனால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி மேற்கண்ட விவரங்களை வழக்குரையிலோ, வாதி தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லப்பட்டுள்ளதை நான் தெரிந்து கொண்டு தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தாயார் பதிவு செய்யப்படாத உயில் ஆவணத்தை எழுதி வைத்தார் என்ற விவரத்தை எனது எதிர்வழக்குரையிலோ, எனது நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்தில் எனது தாயார் சுப்புலெட்சுமியின் நினைவாக நான் காலணி வீடு கட்டவேண்டும் என்பதற்காக கன்சண்ட் லெட்டர் கேட்டேன் என்றால் சரியல்ல. அதனால்தான் வாதி தாவா சொத்தில் உள்ள பழைய வீட்டை இடிக்க அனுமதித்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வீடு கட்டுவதற்காக தாவா சொத்தை பொறுப்புறுதியாக கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் வாதியிடம் கன்சன்ட் லெட்டரை கேட்டேன் என்றால் இல்லை. வா.சா,ஆ.10 ரீஜாயிண்டர் அறிவிப்பின் மூலம் கன்சன்ட் லெட்டர் கொடுக்கவில்லை என்ற விவரத்தையும், பதிவு செய்யப்படாத உயில் ஆவணத்தின் நகலை கொடுக்கக்கோரியும் கூறப்பட்டுள்ளது என்றால் அந்த அறிவிப்பு பற்றி எனக்கு தெரியாது. வழக்கறிஞரிடம் அந்த அறிவிப்பு பற்றி கேட்டேன்,. அதுபோல் அறிவிப்பு வரவில்லை என்று கூறிவிட்டார். வாதி வா.சா.ஆ.10 ஆவணத்தை வழக்குரையிலேயே தெரிவித்துள்ளார் என்றால் அதுபற்றி

எனக்கு தெரியாது. உயில் ஆவணத்தை எதிர்வழக்குரையுடன் இதுநாள்வரை தாக்கல் செய்யவில்லை என்றால் உயில் ஆவணம் கிரையம் பெற்றவரிடம் கொடுக்கப்பட்டு விட்டது. இந்த விவரங்களை நான் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக எனது தாயார் பதிவு செய்யப்படாத உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை என்றும், அதுமாதிரியான உயில் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையான உயில் ஆவணம் இல்லை என்பதால்தான் அந்த உயில் ஆவணம் என்னாலோ, அல்லது 2 ம் பிரதிவாதியாலோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பதிவு செய்யப்படாத உயில் ஆவணத்தின் அடிப்படையில் எந்த ஒரு வருவாய் ஆவணமும் பட்டா பெயர் மாற்றம் செய்ய இயலாது என்றால் சரியல்ல. எந்த வருடத்தில் வட்டாட்சியரிடம் மனு கொடுத்து எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்தேன் என்றால் 2011 ம் ஆண்டு கொடுத்தேன். எனது தாயார் 01.10.2000 ல் இறந்து விட்டார். 25.11.2011 ல் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.11 க்கு பிறகு பட்டா மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா மாற்ற உத்தரவில் பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் பதிவு செய்யப்படாத உயிலின் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதாக காணப்படவில்லை என்றால் சரிதான். நான் எனது செல்வாக்கை பயன்படுத்தி தாவா சொத்திற்கு எனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பி,வா.சா.ஆ.6 ஆவணத்தில் எனது தாயார் இறப்பு சான்று குறித்தோ பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் குறித்தோ காணப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆவணம் தாவா சொத்திற்கு எனது தகப்பனார் பெயர் நீக்கம் செய்யப்பட்டு எனது பெயர் சேர்க்கப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். தாவா சொத்து எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்படும் தேதி வரை எனது தாயார் பெயரில் தான் இருந்தது என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக நிறுத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது)